**<u>தனிப்பட்ட வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணங்களுக்கான</u>**
**<u>அந்நியச் செலாவணி வழங்குதல்</u>**
**A.P. (DIR Series) சுற்றறிக்கை எண்.31(அக்டோபர் 18, 2002)**

அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுத்துறை
மைய அலுவலகம்
மும்பை 400 023

அக்டோபர் 18, 2002

A.P.(DIR Series) சுற்றறிக்கை எண் 31

**அங்கீகரிக்கப்பட்ட அந்நியச் செலாவணி வர்த்தகர் அனைவருக்கும்**

**<u>தனிப்பட்ட வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணங்களுக்கான</u>**
**<u>அந்நியச் செலாவணி வழங்குதல்</u>**

ஓராண்டில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட சொந்த காரணங்களுக்காக தனி நபரின் வெளிநாடடுப் (நேபாளம், பூடான் தவிர) பயணத்திற்கான மொத்த செலவுக்காக 5000 அமெரிக்க டாலர் அல்லது அதற்கு மதிப்புடைய தொகையை விட அதிகமான அளவிற்கு அந்நியச் செலாவணி அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அளித்திட ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி பெறுமாறு இந்திய அரசின் அறிவிப்பு எண் G.S.R.381(E) 3 மே 2000 தேதியிட்ட அட்டவணை III ல் குறிப்பெண் 2ன் கருத்துப்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. பிராந்திய அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அதே நாளில் செயலபடுத்தி முடிக்கும்பொருட்டு, ஒரு துறைசார்ந்த அதிகாரியை ஒவ்வொரு பிராந்தியத்திலும் ரிசர்வ் வங்கி நியமித்துள்ளது. ஒவ்வொரு பிராந்தியத்திற்குமான அதிகாரியின் பெயர், தொலைபேசி எண், மின் அஞ்சல் முகவரி, நகலனுப்பு கருவியின் தொடர்பு எண் (Fax Number) ஆகியவை பின்னிணைப்பில் தரப்பட்ட வெளிநாடடுச் சுற்றுலாவுக்கான அந்நியச் செலாவணி 5000 அமெரிக்க டாலர் மதிப்பைத் தாண்டும் விண்ணப்பங்கள் நகலனுப்பு கருவி மூலமாகவோ, மின் அஞ்சல் மூலமாகவோ பிராந்திய அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படலாம் என்பது மேலும் தெளிவாக்கப்படுகிறது.

3. ஏதாவது இடர்பாடு இருக்குமானால் ரிசர்வ் வங்கி மைய அலுவலகம், மும்பையில்லுள்ள அந்நியச் செலாவணி

கட்டுப்பாட்டுத்துறையின் தலைமைப் பொது மேலாளரை, தொலைபேசி எண் 2663596 மூலமாகவோ, நகலனுப்பு கருவித் தொடர்பு எண் 2661722 மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

4. அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கட்டளைகள் இந்த சுற்றறிக்கையில் அடங்கியுள்ள விவரங்களைத் தத்தம் குழு முகவர்கள் கவனத்திற்குக் கொண்டு செல்வாராக.

5. இந்தச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள கட்டளைகள் யாவும் FEMA 1999 (42 of 1999) ன் சட்டப்பிரிவு எண் 10(4) மற்றும் சட்டப்பிரிவு எண் 11(1)ன் கீழ் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

கிரேஸ் கோஷி
தலைமைப் பொது மேலாளர்